# நூலக நிறுவனம்
## மாதாந்த அறிக்கை - யனவரி 2016

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2016 யனவரி மாத ஆவணவாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 266 | 8676 |
| கையெழுத்துப் பிரதி | 01 | 66 |
| தரமேம்படுத்தல்கள் | 02 | 80 |
| மொத்தம் | 269 | 8822 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணவாக்கப்பட்டவற்றில் 100 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு 02 தரமேம்படுத்தல் ஆவணங்கள் வலைத்தளத்தில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. மிகுதி ஆவணங்கள் மாசி மாதத்தின் முதல் வாரத்தில் பதிவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
- ஆவணவாக்கப்பட்ட கலைக்கேசரி வெளியீடுகள் இரண்டும் புதியசொல் வெளியீடு ஒன்றும் விற்பனையில் உள்ளதால் இவை வலைத்தளத்தில் இணைக்கப்படவில்லை.
- தேடலினை இலகுபடுத்துவதற்காக சஞ்சிகைகள் பத்திரிகைகளுக்கு உள்ளடக்கம் இணைக்கும் பணியினை முன்னெடுத்துவருகிறோம். அவ்வகையில் இம்மாதம் 105 ஆவணங்களிற்கு உள்ளடக்கம் இணைக்கப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- திரு. கோப்பாய் சிவம் அவர்கள் கிடைத்தற்கரிய மறுமலர்ச்சி இதழ்களுடன் 1930-1980களில் வெளியான பல நூல்களையும் ஆவணப்படுத்த வழங்கியிருந்தார்.
- திரு கலாமணி பரணீதரன் அவர்களும் தனது சேகரிப்பிலிருந்த பல சஞ்சிகைகளையும் நூல்களையும் ஆவணப்படுத்த வழங்கியிருந்தார்.
- பருத்தியூர் பாலவைரவநாதன் தனது கையெழுத்துப்பிரதிகளை ஆவணப்படுத்த வழங்கியிருந்தார்.

- மேலும் வேறு பலரும் சிறிய எண்ணிக்கையில் ஆவணங்களை வழங்கினர்.

  வெளியீடுகளை பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள். இவர்கள் வழங்கிய ஆவணங்கள் அடுத்து வரும் மாதங்களில் பகுதி பகுதியாக ஆவணப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- யனவரி மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

**எழுத்தாளார்கள்:**

1. பத்மராஜன் சின்னத்தம்பி
2. கணேசன் செல்லக்குட்டி
3. சுதர்சன் கமலநாதன்
4. மு. செல்லையா
5. பாஸ்கரன் கனகசபை
6. புஸ்பநாதன் அம்பலம்
7. பவந்தி அமிர்தலிங்கம்
8. வாசுதேவன் கனகசபை
9. கு. ரஜீபன்
10. இ. சு. முரளீதரன்

**நிறுவனம்:**

1. கொக்குவில் பொதுநூலகம்

**ஆளுமை விபரம் தொகுப்பு (Bibliography)**

- வாழ்க்கை வரலாற்று களஞ்சியம் தொகுக்கும் பணியில் இம்மாதம் 258 ஆளுமைகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு இணைக்கப்பட்டன. அத்துடன் 204 ஆளுமைகளில் மேலதிக தகவல்கள் இணைக்கப்பட்டன. அவ்வகையில் மொத்தம் 2,239 ஆளுமை விபரங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. இலங்கைத் தமிழ்ச் சமூகங்களின் ஆளுமைகள் தொடர்பான மிக விரிவான ஆவணவாக்கமாக இது விளங்குகிறது.
- நூலக வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களிலிருந்து 438 நேர்காணல் விபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவை வாழ்க்கை வரலாற்று ஆவணவாக்கந் தொடர்பான எதிர்காலச் செயற்றிட்டங்களில் பயன்படுத்தப்படவுள்ளன.

**ஆளணி (Human Resource)**

- நூலக நிறுவனப் பணியாளர்களுக்கும் இயக்குனர்களுக்குமான சந்திப்பு 2016.01.03 அன்று நடைபெற்றது. இச்சந்திப்பில் 2015 ஆம் ஆண்டு அனுபவங்கள் தொடர்பிலும் 2016 க்கான செயற்றிட்டங்கள் தொடர்பிலும் உரையாடப்பட்டது. மதிய உணவுடன் இச்சந்திப்பு இனிதே நிறைவு பெற்றது.
- எமது தொடர்பாடல் அலுவலர் 2015 டிசம்பருடன் நூலக நிறுவனத்துடனான தனது பணியினை நிறைவு செய்துள்ளார். அவருடைய புதிய பணியில் சிறப்பாகச் செயற்பட எமது

வாழ்த்துக்கள். மேலும் ஒரு தன்னார்வலராக அவர் தொடர்ந்தும் நூலக நிறுவனத்தில் செயற்பட்டு வருகிறார்.

- எழுத்தாளரும் வெளியீட்டாளருமான திரு. க. பரணீதரன் இம்மாதம் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளராகப் பொறுப்பேற்றுள்ளார். அவரது துறைசார் அனுபவம் நூலகச் செயற்பாடுகளை மென்மேலும் விரிவாக்க உதவும் என நம்புகிறோம்.
- ஆவணப்படுத்தல் உதவியாளராக இம்மாதம் ஒருவரை நூலக நிறுவனம் நியமித்துள்ளது. அவ்வகையில் இப்பொழுது நூலகத்தில் 10 பேர் நூலகப் பொறுப்புக்களில் பணியாற்றுகின்றனர்.

**ஆண்டு விழா**

- 2005 தையில் தொடங்கப்பட்ட நூலக நிறுவனம் இம்மாதம் 11 ஆண்டுகளை நிறைவுசெய்து 12 ஆவது ஆண்டினுள் நுழைகிறது. இதனை முன்னிட்டு தைப்பொங்கல் விழா 2016.01.15 அன்று நிறுவனத்தின் கட்டைப்பிராய் அலுவலகத்தில் இனிதே நடைபெற்றது.

**வரவு செலவு அறிக்கை**

- யனவரி மாதத் தேவைகளுக்காக ரூ. 306,552.00 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 216,626.00, காப்புப்படி எடுப்பதற்காக வன் தட்டுக்கள் தேவைப்பட்டதனால் 2 TB வன் தட்டுக்கள் 2 கொள்ளவனவு செய்யப்பட்டது. ஆகவே உபகரணச் செலவாக ரூ. 36,000.00, வாடகை, தொலைபேசி, இணையம், போக்குவரத்து, உபகரண பராமரிப்பு போன்ற ஏனைய செலவுகள் ரூ. 53,926.00 ஆகியன உள்ளடங்குகின்றன.

- ஐக்கிய அமெரிக்க அன்பர்கள் மனித நேயம் அறக்கட்டளை ஊடாக ரூ. 250,000 இனையும் யோக நாதன் அறக்கட்டளை ரூ. 30,000 உம் சுவிஸ்லாந்து அன்பர்கள் ரூ. 110,374.25 உம் வழங்கியுள்ளனர். மேலும் சில நன்கொடையாளர்களால் ரூ. 95,306 ஆகிய வரவுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.